முருகப்பெருமான் துணை

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed., ஓம்

சரவண ஜோதியே நமோ நம

**04.05.2022**, புதன்கிழமை

**1.** பரமானந்த சதாசிவ ஞான
பாலதண்டாயுத மகா சூட்சும
அறமாக வந்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி

**2.** கூறியே சுபகிருது தகர் திங்கள்
குறைவிலா மூவேழு திகதி புந்தி வாரம்
**(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 21ம் நாள், 04.05.2022 புதன்கிழமை)**
பெருமைபட அருளாசி தன்னை
புகலுவேன் தூர்வாசமுனிவர் யானும்

**3.** யானும் உலகோர் பண்புற உரைப்பேன்
ஊழதால் பல பிறவி கண்டு
ஞானமிலா மாயை வழிதனில்
நன்மைதருமென உழன்று துன்புறும் மானிடா

**4.** மானிடா மும்மலக் குற்றம்
மாச்சர்ய செயலை விட்டு
இனியேனும் பிறவாது இருக்க
என் சொல் கேட்டு வருவாயப்பா

**5.** அப்பனே மனிதப் பிறவிஅரிது
அதில் பொறிகள் பழுதின்றி
காப்பாக செனிப்பது அரிது
கருணைமிக்க இறைபலம் உலகில்

**6.** உலகில் நல்படைப்பு தருகவே
உணராது தீதான வழியில்
கலகம் பேராசை வஞ்சமென
கரும இந்திரியங்களில் மாட்டி

**7.** மாட்டியே பாவம்பல செய்து
மாதவ பலம் அறியா மானிடா
வாட்டமிலா வாழ்வை பெற
வந்த நோக்கம் நீ அறிய

**8.** அறியவே ஆறுமுகன் அம்சமாக
அரங்கமகா ஞானியரின்
அறிவுரை உபதேசமாக வரும்
ஆன்மீக ஞான வழிகளை ஏற்று

**9.** ஏற்றுத் தொடர்ந்து வர
இணையிலா ஞானிகள் பேரில்
ஆற்றல்தரும் பூசை செய்து
அன்னதான சேவை வழி

10. வழிதனில் பொருளுதவி செய்து
வணங்கித் தருமமும் புரிய
அழியாமை எனும் சூட்சுமம்
அறிவுக்கு எட்டி இனிதே

11. இனிதே அரங்கன் தயவில்
இனி பிறவாப் பேற்றை
துணிவுபட அடைய நேரும்
தூர்வாசமுனிவர் என் அருளாசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**உலக மக்களுக்கு மகான் தூர்வாசமுனிவரின் உபதேசம்**

முன் செய்த வினைகளின் காரணமாக பல பிறவிகள் எடுத்து, எடுக்கும் பிறவிகளில் அறியாமையின் காரணமாகவும், மாயையின் காரணமாகவும் நிலையில்லாததை நிலையென்று எண்ணி மயங்கி மானிடர்கள் துன்பப்படுகிறார்கள். மேலும் மும்மலக் குற்றத்தால் பிறர்மீது பொறாமை கொண்டு, அவர்களைப் பற்றி புறம்பேசி அவர்களது வாழ்க்கையையும் அழித்து இவர்கள் பாவத்தையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

இவ்வுலகினில் ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள ஜீவர்களில் உயர்ந்த பிறவி என்பது மனித பிறவி மட்டுமே ஆகும். மனித பிறவி கிடைப்பதே மிகவும் அரிதான ஒன்றாகும். அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு இல்லாமல் பிறப்பது மிகவும் அரிதான ஒன்றாகும்.

**mÇaJ nf£»‹ tÇto ntnyhŒ**
**mÇJ mÇJ khÅl® MjŠ mÇJ;**
**khÅl® MÆD« T‹FUL brÉL**
**ngL Ú§»¥ ãw¤jŠ mÇJ**
**ngL Ú§»¥ ãwªj fhiyí«**
**PhdK« fšÉí« ea¤jŠ mÇJ;**
**PhdK« fšÉí« eaªj fhiyí«**
**jhdK« jtK« jh‹braš mÇJ**
**jhdK« jtK« jh‹brŒt uhÆ‹**
**thdt® ehL tÊ âwªâLnk.**

**– மகான் ஔவையார் – தனிப்பாடல் – கவி எண் 57.**

இவ்வாறு அரிதாக கிடைக்கப்பெற்ற பிறவியைக் கொண்ட மனிதர்கள் தங்களது சிந்தையை நல்வழியில் செலுத்தாமல், தீய வழிகளில் செலுத்தி கலகம், பேராசை, வஞ்சம் போன்ற குணக்கேடுகளில் சிக்கி, எடுத்த பிறவியின் பயனறியாமல் வாழ்ந்து, பாவத்தையும் சுமந்து இறந்தும் போகிறார்கள்.

முருகப்பெருமானின் ஆசியில்லாமல் நன்மையையும் தீமையையும் ஒருவர் அறிய முடியாது, பாவத்தையும் புண்ணியத்தையும் அறிய முடியாது. இந்த வேறுபாட்டை அறிய முடியாதவர்களின் சிந்தையும் தெளிவடையாது. சிந்தை தெளிவில்லை என்றால் அறியாமை சூழ்ந்துவிடும்.

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**

**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

**– திருக்குறள் – அறிவுடைமை – குறள் எண் 422.**

மனத்தைச் சென்ற இடத்தில் செல்லவிடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

– நன்றி மு.வரதராசனார்

குணக்கேடுகளிலிருந்து விடுபட்டு சிந்தை தெளிவடைய முருகப்பெருமானின் ஆசி ஒன்றே உபாயமாகும். முருகப்பெருமானின் ஆசியைப் பெற விரும்பும் மக்கள் முருகப்பெருமானின் திருவடியைப் பூசித்து பசித்த ஏழைகளுக்கு அன்னதானம் செய்து வர வேண்டும். மேலும் முருகப்பெருமானின் ஆசியைப் பெற விரும்பும் மக்கள் முருகப்பெருமானின் அம்சமாக, மறுஉருவாக தோன்றி ஓங்காரக்குடிலில் வீற்றிருக்கும் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் அவர்கள் அருளுகின்ற ஞானஉபதேசங்களை தாங்கி மாதந்தோறும் வெளிவரும் ஞானத்திருவடி மாதஇதழை தொடர்ந்து படித்தும், கடைப்பிடித்தும் வர வேண்டும்.

ஓங்காரக்குடிலாசானின் உபதேச வழிகளில் மகான் முருகப்பெருமானை பூசித்தும், நவகோடி ஞானிகளும் தங்கி அருள்புரிகின்ற ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதான சேவைகளுக்கு தொடர்ந்து பொருளுதவியும் செய்து வரும் மக்களுக்கு, என்றும் அழியாது நிலையாக இருக்கும் உண்மைப்பொருளை அறியக் கூடிய வாய்ப்பும் கிடைக்கும்.

உலகிற்கே குருநாதராக விளங்கக் கூடிய முருகப்பெருமானின் திருவடியைப் பூசித்து உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொண்டு பசித்த ஏழைஎளியவர்களுக்கு அன்னதானம் செய்து வரும் மக்களுக்கு, தெளிவான சிந்தனையுடன் கூடிய அறிவும், நல்வாழ்வும் அமையும் என்பது மகான் தூர்வாசமுனிவரின் சத்திய வாக்காகும்.

மனித தேகம் காமம், நரை, திரை, மூப்பு, பிணி, மரணத்திற்கு உட்பட்டதே ஆகும். உடலையும், உயிரையும் பற்றி அறியும் அறிவே சிறப்பறிவாகும். மனிதனின் தொடர் பிறவிக்கு காரணமே உடலையும் உயிரையும் பற்றிய அறியாமையே ஆகும். உடலில் சுத்தமும், அசுத்தமும் கலந்துள்ளது. முருகப்பெருமானின் ஆசி கொண்டு அசுத்தத்தை நீக்கி, சுத்த தேகத்தை அழியாது நிலைப்படுத்திக் கொள்வதே, அழியாமை என்னும் பேரறிவாகும். சுத்தம் அசுத்தத்தை அறிய ஆறுமுகப் பெருமானின் ஆசியைப் பெற வேண்டும்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

**– திருமந்திரம் – சரீர சித்தி உபாயம் – கவி எண் 724.**

மகான் அகத்தியர் முதல் நவகோடி சித்தர்களும் சுத்த அசுத்தத்தை அறிந்து உடலையும், உயிரையும் காப்பாற்றக் கற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள்.

மனித தேகத்தில் உள்ள சுத்த அசுத்தத்தை அறிந்து, அசுத்தத்தை நீக்கும் முறையை கண்டறிந்து, அதை பெருங்கருணை கொண்டு உலகிற்கு அறிவித்த, மகான் முருகப்பெருமானின் ஆசியில்லாமல் இதை அறிந்து கொள்ள உபாயமில்லை. ஒரு அணுவை ஆயிரம் கூறாக பிரிக்க கற்றுக் கொண்டாலும், ஆறுமுகப் பெருமானின் அறிவையும் ஆற்றலையும் ஒரு அணுவளவு கூட கண்டு பிடிப்பது அரிதான செயலாகும். அமுதத்தில் விஷம் கலந்திருக்கும். அதிலுள்ள விஷத்தை மட்டும் பிரித்து எடுப்பது, தயவு அல்லது கருணை என்னும் வேதியலாகும். இந்த வேதியலைதான் முருகப்பெருமான் பெருங்கருணை கொண்டு, தன்னை நம்பி வந்த அடியார்களுக்கு ஞானமாக போதித்துள்ளார்கள். உயிரினங்களுக்கு பசியாற்றுவதே உண்மை ஞானமாகும் என்பதையும்

உலகிற்கு அறிவித்தவர் முருகப்பெருமானே. இதை முருகப்பெருமான் சொல்லாவிட்டால், இவ்வுலகில் சொல்வதற்கு வேறு நாதியுமில்லை. என்னே கருணை!!

கூர்பார்வையை புருவமத்தியில் செலுத்தினால், அதுவே மூலக்கனல் தோன்ற காரணமாக உள்ளது என்பதை கண்டறிந்தவர் முருகப்பெருமானே. கோடானகோடி இரகசியங்கள் அடங்கியதுதான் ஞானம். அதில் ஒரு அணுவளவு இரகசியம்தான் இது. இவ்வளவு இரகசியங்களையும் ஜீவதயவு கொண்டு கண்டறிந்தவர் முருகப்பெருமானே ஆவார்.

**அத்தாற் பிறவி யவரிரு கண்களை**
**வைத்தார் நுனிமூக் கின்புரு வத்திடை**
**நித்தார மங்கே நினைக்கவல் லார்க்கு**
**எத்தாலுஞ் சாவிலை இறையவ னாமே.**

**– திருமூலர் ஞானக்குறி 30 – கவி எண் 5.**

முருகப்பெருமானின் பெருமையைதான் மகான் இராமலிங்கசுவாமிகள்,

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

என அருட்மந்திரமாக குறிப்பிட்டுள்ளார்கள். முருகப்பெருமானின் கருணையை உணர்ந்த மகான் இராமலிங்க வள்ளலார் அந்த பெருங்கருணையை வியந்து இந்தப் பாடலை இயற்றியுள்ளார்கள்.

**நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே**
**நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு**
**நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான**
**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**
**வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்**
**மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்**
**புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்**
**பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.**

**– திருஅருட்பா ஆறாம் திருமுறை – வாய்ப்பறை யார்த்தல் – கவி எண் 1530.**

மகான் துர்வாசமுனிவர் அருளிய இந்நூல், தத்துவம் நிறைந்த நூலாகும். இந்த நூலை பின்பற்றி நடக்க விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட குற்றங்கள் நீங்கி வாழ வேண்டும்.

பஞ்சமா பாதகங்களான கள் (மது), களவு, காமம், கொலை, பொய் கூறல் இவற்றிற்கு தலைவன் மது என்னும் அசுரனே ஆகும்.

- ❖ மது அருந்துதல் – மது அருந்துதல் என்பது கொடிய பாவச்செயல். மேலும் சின்னத்திரை மற்றும் பெரிய திரைகளில் மது அருந்துவது, மது அருந்திவிட்டு கலாட்டா செய்வது, கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து மது அருந்தி மகிழ்வது, போன்ற காட்சிகளை அமைப்பது பாவச்செயலாகும். இந்தக் காட்சிகளை காணும் மக்களின் உணர்வினை தூண்டி, மது அருந்தும் பழக்கத்தில் ஈடுபட செய்வது மிகவும் கொடிய பாவச் செயலாகும். இதை ஞானிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மது அருந்தி மயங்குகின்ற மனிதர்களைப் பற்றி, மகான் திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் உள்ள கருத்துகள்.

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.**

**– திருக்குறள் – கள் உண்ணாமை – குறள் எண் 926.**

மெய்மறந்து தூங்குபவர் இறந்தவருக்கு ஒப்பாவார். இருவருக்கும் உணர்வு இருக்காது. அதுபோல விஷம் அருந்தியவன் உடனே இறந்து போவான். மது அருந்துபவன் சிறிதுசிறிதாக துன்பப்பட்டு சாவான்.

- ❖ களவு – திருடுவது. லஞ்சம் வாங்குவது வழிப்பறிக்கு ஒப்பாகும். லஞ்சம் வாங்குவதும் திருடுவதும் ஒன்றுதான்.
- ❖ விலைமகளிருடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல்.
- ❖ கொலை – பொருள் பற்றினால் ஏற்படும் குணக்கேடு.
- ❖ பொய் கூறல் – நடக்காத ஒன்றை, நடந்ததாக கூறி அடுத்தவர் வாழ்க்கையை கெடுப்பது.

மேலும் குணக்கேடுகளான,

- ❖ சூது விளையாடல்.
- ❖ புலால் உணவினை மேற்கொள்ளுதல்.

முன் செய்த வினையின் காரணமாக பற்றித் தொடரும் பஞ்சமா பாதகங்களையும், குணக்கேடுகளையும் வெல்வதற்கு, மகான் முருகப்பெருமான் ஆசி ஒன்றே உபாயமாகும்.

உலக நன்மைக்காக தமிழ்நாட்டில் அவதரித்தவர்தான் முருகப்பெருமான். மகான் மாணிக்கவாசகர் “**தென்னாடுடைய சிவனே போற்றி**” என்று குறிப்பிட்டதும் முருகப்பெருமானையே! தமிழ்நாட்டில் பிறந்த அனைவரும் முருகப்பெருமானின் திருவடியை போற்றி வணங்குவது நன்மையைத் தரும்.

**ஆற்றலாம் தமிழ்த்தாய் அருளினாள் முருகனை**
**ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.**

**நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட**
**வாட்டமும் இல்லை மனமும் செம்மையே.**

**அருளாம் அருணகிரி அருளினைப் போற்றிட**
**இருளெல்லாம் விலகி வாழ்வில் இன்பம் உண்டாம்.**

**காலத்தை வென்ற கந்த வேலனே**
**ஞாலத்தை ஆள நமக்கே அருள்வார்.**

**நற்றவ வேலனை நாளும் போற்றிட**
**பற்றற்ற வாழ்வும் பரகதியும் கூடுமே.**

**எந்தை நந்தனார் இணையடி போற்றிட**
**சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே.**

**பக்தியும் புண்ணியமும் பரகதிக்கு துணையாம்.**

**போற்றுவோம் முருகப்பெருமான் திருவடியை!**
**பெறுவோம் பேரின்ப வாழ்வை!**

**– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.**

———